கூட்டில் முயற்சி
விடாமுயற்சி திருவினையாக்கும்
KOOTIL MUYARCHEE தமிழ் மாத இதழ்
Web : kootilmuyarchee.com
YouTube kootilmuyarchee

திருப்பூர் மலர் - 5 இதழ் -9 ஆகஸ்ட் 2024 பக்கம் -36 விலை ரூ.20/-
Tirupur Volume- 5 Issue -9 August 2024 Page - 36 Price: Rs.20 /-



# வெளிநாடுகளுக்கு பயிலச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களின் முழு கல்விச் செலவை அரசே ஏற்கும்

## - முதல்வர் ஸ்டாலின்



# வயநாடு நிலச்சரிவால் அதிர்ச்சி

# ‘வேர்களைத் தேடி’ திட்டத்தின்கீழ் 100 அயலக தமிழர்கள் ‘தமிழக சுற்றுப்பயணம்’ முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



‘வேர்களைத் தேடி’ திட்டத்தின் கீழ் 15 நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் தமிழகத்தில் 15 நாட்கள் மேற்கொள்ளவுள்ள சுற்றுப்பயணத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: பண்டைய தமிழர்களின் கட்டிடம், சிற்பக்கலை, நீர்மேலாண்மை, ஆடைகள் மற்றும் ஆபரணங்கள், கலை இலக்கிய பண்பாடு,தொல்லியல் ஆய்வுகள், அறிஞர்கள் மற்றும் சான்றோர்களுடன் கலந்துரையாடல் என்றகலாச்சார பரிமாற்றம் மேற்கொள்ளும் சுற்றுலாத் திட்டமான ‘வேர்களைத் தேடி’ என்ற அயலகத் தமிழ் இளைஞர்களுக்கான திட்டத்தை கடந்தாண்டு மே 24-ம் தேதி சிங்கப்பூரில் நடைபெற்ற தமிழ் கலை பண்பாட்டு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

இத்திட்டப்படி, அயல்நாடுகளில் வாழும் 18 முதல் 30 வயதுக்கு உட்பட்ட தமிழ் இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, தமிழகம் வரவழைத்து தமிழ் மற்றும் தமிழர்களின் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழகத்தின் வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு, தமிழகஅரசு சார்பில் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

அதன் அடிப்படையில், சென்ற ஆண்டு இந்த பண்பாட்டுப் பயணத் திட்டத்தில், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் மூலம் 4 நாடுகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களைக் கொண்டமுதற்கட்ட பயணம் மேற்கொள்ளப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் 2-ம் கட்ட பயணமாக, தென்ஆப்ரிக்கா, உகாண்டா, குவாடலூப், மார்டினிக், பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை. பிரான்சு மற்றும் ஜெர்மனி ஆகிய 15 நாடுகளைச் சேர்ந்த100 அயலகத் தமிழ் இளைஞர்கள் வரவழைக்கப்பட்டு, ஆக.1 முதல் 15-ம் தேதி வரை 15 நாட்களுக்கு தமிழகத்தின் முக்கிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

இப்பயணத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இப்பயணத்தில் பங்குபெறும் அயலகத் தமிழ் இளைஞர்கள், தமிழகத்தின் கலாச்சார தூதுவர்களாகச் செயல்பட்டு தமிழர்களின் கலாச்சார பெருமைகளை அவர்களது நாடுகளில் பரப்புவர்.

இந்நிகழ்ச்சியில், வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, பொதுத்துறை செயலர் ரீட்டா ஹரிஷ் தக்கர், இணைச் செயலர் பா. விஷ்ணு சந்திரன், மறுவாழ்வுத்துறை ஆணையர் பா. கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டில்
முயற்சி
புலனாய்வு மாத இதழ்

ஆசிரியர் வெளியீட்டாளர்,
நிறுவனர்

**L.சூரியகுமார்**

99941 90815

செய்தி ஆசிரியர்,
**பரமராஜ்** பழனி
**D.மயில் மணி**
**D.சுரேஷ்** பழனி

நிர்வாக ஆசிரியர்கள்,
T.S.**முருகன், காளீஸ்வரன்** (சென்னை)

துணை ஆசிரியர்கள்,

C. **போஸ்** T.**சபரிராஜ்,**
R.**கோபாலகிருஷ்ணன்,**
v.**செல்வராஜ்,** K. **பழனிசாமி**
**சுப்புலட்சுமி**

தலைமை நிருபர்கள்

S.**மோகன்,**
R.**ஜெய்சங்கர்**
A.**சரவணன்,**

**ரவீந்திரன்** (சென்னை சிறப்பு நிருபர்)

தூய்மை.பொறுமை.
விடா முயற்சி இவற்றிக்கு
மேலாக அன்பு
இவையே வெற்றிக்கான
படிகள்

**- சுவாமி விவேகானந்தர்**



சென்னை எழும்பூர் பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னிலையில் RNI புதுடெல்லியில் பதிவு பெற்ற கூட்டில் முயற்சி மாதஇதழில் பத்திரிக்கை சட்டதிட்டத்திற்கு உட்பட்டு செய்திகள் உண்மைத் தன்மையுடன் வந்து கொண்டிருக்கிறது.

This publication Kootil Muyarchi has been sworned before the Hon'ble Metropolitan Magistrate Egmore chennai. All the news publishing in this magazine collected from credential, valuable sources that are evidentially true. Subject to the Madras High Court Jurisdiction, The Press Registration Act, RNI New Delhi.

# கேரளா வயநாடு நிலச்சரிவில் சிக்கி
# 240 பேர் பலி!



கேரள மாநிலம், வயநாட்டில் பெய்த அதி கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை, 240 ஆக அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று தெரிகிறது. மாநிலத்தின் மிகவும் கொடூரமான இயற்கை சீற்றமாகக் கருதப்படும் இந்த நிலச்சரிவில் சிக்கி மாயமாகியுள்ள 225 பேரை தேடும் முயற்சி தீவிரமாக நடந்து வருகிறது.

நீலகிரி மாவட்டம், பந்தலுலூரை ஒட்டியுள்ளது, கேரளத்தின் வயநாடு மாவட்டம். இங்கு, மலைகளுக்கு இடையே உள்ள முண்டக்கை, சூரல்மலை பகுதிகளில் தேயிலை தோட்டங்கள், சுற்றுலா தலங்கள் உள்ளன.

இந்த பகுதிகளில் நேற்று முன்தினம் அதி கனமழை பெய்தது. காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்தது. மழை எச்சரிக்கையால் முகாம்களில் தங்க வைத்திருந்த மக்கள், மேடான பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டனர். மலையில் இருந்து மரங்களையும், பாறைகளையும் அடித்து வந்தது வெள்ளம். விடுதிகளிலும் வீடுகளிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள், வெள்ளத்தில் மிதந்து வந்தன.

வெள்ளத்தின் விளைவாக நேற்று அதிகாலை 1:00 மணிக்கு, முண்டக்கை பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டது; ஆற்றின் கரைகள் உடைந்தன. சரிந்த மண்ணையும் இழுத்துக் கொண்டு, வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது. உறங்கிக்கொண்டிருந்த மக்கள் மண்ணில் புதைந்தனர். சுவரிலும், பாறையிலும் மோதி சிதைந்த உடல்கள், மலப்புரம் சாலியாறு நோக்கி அடித்துச் செல்லப்பட்டன.

சூரல்மலை பகுதியில் பாலம் அடித்துச் செல்லப்பட்டதால், முண்டக்கை பகுதிக்கு யாரும் செல்ல முடியாத நிலை உருவானது. அங்கு வசித்த 400 பேரின் கதி கேள்விக்குறி ஆனது. அவர்களை மீட்க என்ன செய்யலாம் என அதிகாரிகள் யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில், சூரல்மலையிலும் காலை 4:00 மணிக்கு நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால், இருவழிஞ்ஞி ஆறு இரண்டாகப் பிரிந்து, அந்த





பகுதியை சூழ்ந்து கொண்டது. இதில் அந்த கிராமத்தினர் அடித்துச் செல்லப்பட்டனர். முண்டக்கையிலும், சூரல்மலையிலுமாக மூன்று இடங்களில் செங்குத்தான நிலச்சரிவு ஏற்பட்டதாக அதிகாரிகள் கூறினர். சாலியாறு வழியாக வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட சடலங்கள், சூரல்மலையில் இருந்து 25 கி.மீ., தூரத்தில் உள்ள போத்துகல் பகுதியில் கரை ஒதுங்கின.

புதையுண்டன

தேயிலை தோட்ட தொழிலாளர்கள் குடியிருந்த 100 வீடுகள் என்ன ஆயிற்று என்றே தெரியாத அளவுக்கு, மண்ணில் புதையுண்டன. கரையோரம் இருந்த மேலும் 500 வீடுகள், இருந்த சுவடே காணாமல் போயின. பள்ளிகள், வழிபாட்டு தலங்களையும் காணவில்லை. மாநில அரசின் கோரிக்கையை ஏற்று, முப்படைகளும் மீட்புப் பணியில் இறங்க மத்திய அரசு உத்தரவிட்டது.

ராணுவத்தின் மெட்ராஸ் ரெஜிமென்ட் பிரிவைச் சேர்ந்த, 43 பேர் அடங்கிய குழு உடனடியாக அனுப்பப்பட்டது. மற்ற இடங்களில் இருந்து 200 வீரர்கள் அனுப்பப்பட்டனர். கடற்படையின் நீச்சல் வீரர்களும் விரைந்தனர். விமானப்


செய்தியாளர்கள்,

R.**நடராஜன்** (சேலம்)

D.**மணிகண்டன்** (திண்டுக்கல்)

**பிச்சைமணி** (தேனி)

A. **அருணாசலம்** (சூலூர்)

R.**செந்தில்** (நாமக்கல்)

**மகேந்திரன்** (திருப்பூர்)

M.**ராமகிருஷ்ணன்** (சேலம்)

G.**கோபால் ராஜ்** (விருதுநகர்)

**கருப்பையா** (நிலக்கோட்டை)

**குரு** (திருச்சி) **கார்த்தக்ராவ்** (தஞ்சாவூர்)

சட்ட ஆலோசகர்கள்,

K.**சகாதேவன்,** M.com,LLB.

S.**சரவணகுமார்,** Bsc.L,L,B.







படையின் ஹெலிகாப்டர்கள் உடனடியாக மீட்புப் பணியில் ஈடுபட்டன. மோசமான நிலச்சரிவு என்பதால், எங்கு பார்த்தாலும், சேறும் சகதியுமாக இருந்தது. வெள்ளம் வடியவும் நேரம் பிடித்தது. இதனால், மீட்புப் படையினரால் சம்பவ இடங்களை உடனடியாக அடைய முடியவில்லை. தேசிய பேரிடர் மீட்புப் படையினர், மாநில பேரிடர் மீட்புப் படையினர் இணைந்து செயல்பட்டு வருகின்றனர்; இன்று மதியம வரை, 224 பேர் இறந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. இன்னும் 225 பேரை காணவில்லை. 3,000 பேருக்கு மேல் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். விடிய விடிய மீட்பு பணி தொடர்ந்தது.

கேரளாவின் மிகப் பெரும் இயற்கை பேரழிவு இது என முதல்வர் பினராயி விஜயன் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவும், விஜயனிடம் பேசினர். மத்திய அரசு தரப்பில் எல்லா உதவிகளும் செய்வதாக உறுதி அளித்துள்ளனர். பார்லி.,யிலும் வயநாடு சம்பவம் குறித்து விவாதிக்கப்பட்டது.

லோக்சபா எதிர்க்கட்சி தலைவர் ராகுல், மத்திய அமைச்சர்களுடன் பேசினார். வயநாடு தொகுதியின் முன்னாள் உறுப்பினரான ராகுல், அங்குள்ள மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறு, லோக்சபாவில் அரசை கேட்டுக் கொண்டார்.

ராஜ்யசபாவில் சபை அலுவல்களை ஒத்தி வைத்து இந்த பேரிடர் குறித்து பேச வேண்டும் என, கேரளா எம்.பி.,க்கள் வலியுறுத்தினர். அவர்கள் பேச அனுமதிக்கும்படி, எதிர்க்கட்சி தலைவர் கார்கே வலியுறுத்தினார். அதையடுத்து, எம்.பி.,க்கள் பேசுவதற்கு, சபைத் தலைவர் ஜக்தீப் தன்கர் அனுமதி அளித்தார்.

நிலச்சரிவு பாதிப்பு தீவிரமாக உள்ள நிலையில், வயநாடு மற்றும் அதன் அருகில் உள்ள மலப்புரம், கோழிக்கோடு, கண்ணூர் மாவட்டங்களுக்கு, அதி தீவிர மழைக்கான, ரெட் அலர்ட் எச்சரிக்கையை, இந்திய வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது. இதைத் தவிர, பத்தினம்திட்டா, ஆலப்புழா,

கோட்டயம், எர்ணாகுளம், இடுக்கி, திருச்சூர், பாலக்காடு, காசர்கோடு மாவட்டங்களுக்கு அதிக மழைக்கான ஆரஞ்ச் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. ரெட் அலர்ட் எச்சரிக்கையின்படி, 24 மணி நேரத்தில், 20 செ.மீ.,க்கு அதிகமாகவும், ஆரஞ்ச் அலர்ட் எச்சரிக்கையின்படி, 11 – 20 செ.மீ., வரை மழை பெய்யவும் வாய்ப்புள்ளது.



வயநாடு நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த, 3 வயது குழந்தை உட்பட, 26 பேரின் உடல்கள், மலப்புரம் மாவட்டத்தில் உள்ள சாலியாறு ஆற்றின் இருட்டுக்குத்தி, பொதுகல்லு, பனங்காயம், பூதானம் உள்ளிட்ட பகுதிகளில் மிதந்த நிலையில், நேற்று கண்டெடுக்கப்பட்டன. கை, கால்கள் மற்றும் தலைகள் கூட இல்லாத நிலையில், சில உடல்கள் ஆற்றின் கரையில் கரை ஒதுங்கின.

நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட முண்டக்கை பகுதியில் உள்ள தேயிலை, காபி மற்றும் ஏலக்காய் தோட்டங்களில் பணிபுரிந்து வந்த மேற்கு வங்கம் மற்றும் அசாமில் இருந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உட்பட, நூற்றுக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர்.

ஹாரிசன்ஸ் மலையாள பிளாண்டேஷன் நிறுவன பொது மேலாளர் பெனில் ஜான் கூறுகையில், ''முண்டக்கை பகுதியில் உள்ள தேயிலை தோட்டங்களில், எங்கள் நிறுவனம் சார்பில், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உட்பட 600 பேர் பணிபுரிந்து வந்தனர்.''மொபைல் போன் நெட்வொர்க் துண்டிக்கப்பட்டு விட்டதால், ஏராளமான தொழிலாளர்களை தொடர்புகொள்ள முடியவில்லை. இதுவரை, எங்கள் நிறுவனத்தின் ஐந்து ஊழியர்களின் உடல்களை மீட்புக் குழுவினர் மீட்டுள்ளனர். 35 தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரையும் காணவில்லை,'' என்றார்.

கல்பெட்டா எம்.எல்.ஏ., டி.சித்திக் கூறுகையில், ''முண்டக்கை பகுதியில் ஏராளமானோர் சிக்கித் தவித்து வருகின்றனர். அவர்களது நிலைமை மோசமாக இருக்கிறது. அவர்களை காப்பாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாலை 5:00 மணிக்கு பின், முண்டக்கை பகுதி இருட்டாகி விடும். அதற்குள் முடிந்த மீட்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்,'' என்றார்.மோசமான வானிலை காரணமாக, நம் விமானப்படையின் ஹெலிகாப்டரால், முண்டக்கை பகுதிக்கு செல்ல முடியவில்லை என, தகவல்கள் தெரிவிக்கின்றன.



### மீட்பு பணியை ஒருங்கிணைக்க5 அமைச்சர்கள்

வயநாடு நிலச்சரிவு மீட்புப் பணியை ஒருங்கிணைக்க, கேரள அமைச்சர்கள் ஏ.கே.சசீந்திரன், கடன்னபப்பள்ளி ராமச்சந்திரன் உட்பட ஐந்து அமைச்சர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டு உள்ளது. இவர்கள் வயநாட்டில் தங்கியிருந்து மீட்புப் பணிகளை கண்காணிக்க உள்ளனர். மேலும், தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தின், குன்னூரின் வெலிங்டனில் உள்ள ராணுவ தலைமையகத்திலிருந்து ராணுவக் குழுவினரும் வயநாட்டில் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதேபோல், கர்நாடகாவின் பெங்களூரு மற்றும் தமிழகத்தின் அரக்கோணத்தில் இருந்து வந்த தேசிய பேரிடர் மீட்புப் படையினரும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இது தவிர, தீயணைப்புப் படை, காவல் துறை, வனம் மற்றும் வருவாய்த் துறை ஊழியர்கள், நிலப்பரப்பை நன்கு அறிந்த ஏராளமான உள்ளூர் மக்களும் மீட்புப் பணிகளில் இணைந்துள்ளனர்.

வயநாட்டில் கனமழையைத் தொடர்ந்து, வெள்ளர்மல்லில் செயல்படும் அரசு தொழிற்கல்வி மேல்நிலைப் பள்ளி நிவாரண முகாமாக செயல்பட்டு வந்தது. இங்கு நேற்று முன்தினம் பல குடும்பங்கள் தங்கி இருந்தன. நேற்று அதிகாலை கனமழை தீவிரமடைந்ததை அடுத்து, சிலர் பள்ளியில் இருந்து வெளியேறினர். எனினும், சிலர் பள்ளியிலேயே தங்கினர். தற்போது நிலச்சரிவால் இந்த பள்ளி பாதிக்கப்பட்டுள்ளது. பள்ளியை சுற்றி சேறும், சகதியுமாக உள்ளது. இதில் தங்கியிருந்தோரின் நிலை குறித்த தகவல் எதுவும் வெளியாகவில்லை.

நிலச்சரிவு ஏற்படுவதற்கு மூன்று முதன்மையான காரணங்களை நிபுணர்கள் வரிசைப்படுத்துகின்றனர். 1. புவியியல், 2. உருவவியல், 3. மனித செயல்பாடு.

* புவியியல் என்பது நிலத்தின் தன்மையுடன் தொடர்புடையது. பூமி அல்லது பாறை பலவீனமாக இருக்கலாம். அதில் விரிசல்கள் இருக்கலாம். நிலத்தின் வெவ்வேறு அடுக்குகள் வெவ்வேறு வலிமை



மற்றும் உறுதித்தன்மை கொண்டிருக்கலாம்.

* உருவவியல் என்பது நிலத்தின் அமைப்பை குறிக்கிறது. உதாரணமாக, காட்டுத் தீ அல்லது வறட்சியினால் தாவரங்களை இழக்கும் மலைச்சரிவுகளில் மிக எளிதாக நிலச்சரிவுகள் ஏற்படக்கூடும் என நிபுணர்கள் கூறுகின்றனர். தாவரங்கள் மண்ணை உறுதியுடன் தக்கவைத்துக் கொள்கின்றன. மேலும் மரங்கள், புதர்கள் மற்றும் பிற தாவரங்களின் வேர் அமைப்புகள் இல்லாமல், நிலம் உறுதித்தன்மையை இழந்து, எளிதில் சரிய வாய்ப்புள்ளதாக கூறுகின்றனர்.

* அதோடு, விவசாயம் மற்றும் கட்டுமானப் பணிகள் போன்ற மனித செயல்பாடுகள், நிலச்சரிவுக்கான வாய்ப்புகளை அதிகரிக்கின்றன. நீர்ப்பாசனம், வனங்கள் அழிப்பு, அகழ்வாராய்ச்சி மற்றும் நீர்க்கசிவு உள்ளிட்டவை சரிவான பகுதிகளை சீர்குலைக்கவும், பலவீனப்படுத்தவும் அதிக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

அசாமின் குவஹாத்தியை சேர்ந்த சுற்றுச்சூழல் நிபுணர் பார்த்தா ஜோதி தாஸ் கூறியதாவது: மலைகளின் பலகீனமான நிலப்பரப்பில் தேவையற்ற, நடைமுறைக்கு மாறான அல்லது திட்டமிடப்படாத கட்டுமானங்கள் குறுக்கிடும் போது, நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன. அரசு மற்றும் தனியார் உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக காடுகளை அழிப்பதால், மண் வலுவிழக்கிறது. உயரத்தில் இருந்து வரும் மழைநீர் மண் சரிவை ஏற்படுத்துகிறது. ரயில் பாதை விரிவாக்கம், சாலை மற்றும் பாலங்கள் அமைப்பது போன்ற பணிகளால், மலைப் பகுதிகளின் சுற்றுச்சூழல் சீர்குலைகின்றன. பொதுவாக, 50 முதல் 60 சதவீத மழைநீரை பூமி உள்வாங்கிக் கொள்கிறது. நிலப்பரப்பின் சீரழிவு காரணமாக, பூமிக்கும் நீர் ஊடுருவுவது தடைபடுகிறது. தாவர வடிவங்களின் மாற்றத்தால் மண் தாங்கும் திறனை இழக்கிறது. இதனால் நிலத்தில் நீர் தேங்கி, மண் தளர்ந்து, நிலச்சரிவு ஏற்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

தமிழர்கள் 9 பேர் பலி

வயநாடு நிலச்சரிவில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தமிழர்கள் 9 பேர் பலி; 30 பேர் மாயம் என தகவல்




# ஆவின் நிறுவனம் சார்பில் ரூ.44 கோடி மதிப்பில் பால் பண்ணைகள், ஆய்வகம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

ஆவின் சார்பில் ரூ.43.61 கோடிமதிப்பிலான பால் பண்ணைகள், ஆய்வுகம் என 4 முடிவுற்றதிட்டப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: திமுக அரசு பொறுப்பேற்ற 2021-ம் ஆண்டு மே முதல் தற்போதுவரை ஆவின் நிறுவனத்தின் மேம்பாட்டுக்காக ரூ.94.41 கோடி செலவில் புதியபால் பதப்படுத்தும் மற்றும் பால் பாக்கெட் தயாரிக்கும் தொழிற்சாலைகள், புதிய ஐஸ்கிரீம் தயாரிக்கும் தொழிற்சாலைகள், சேமிப்புக் கிடங்குகள், ஆய்வுக் கூடங்கள், பால் கொள்முதல் பிரிவுக் கட்டிடங்கள் உள்ளிட்ட கட்டிடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

திறப்பு, அடிக்கல்: இந்நிலையில், பால் நுகர்வோர்களுக்கு தரமான பால் தங்கு தடையின்றி கிடைக்கவழிவகை ஏற்படுத்தும் விதமாக கரூர் மாவட்டம், தோரணக்கல்பட்டி, திருவண்ணாமலை மாவட்டம், வேங்கிக்கால் ஆகிய இடங்களில் பால் பண்ணைகள், திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் பால் பண்ணையில் தயிர், மோர் தயாரிக்கும் ஆலை, மாதவரத்தில் நோய்க் கிருமிகளைக் கண்டறியும் மேம்படுத்தப்பட்ட ஆய்வகம் என ரூ.10.61 கோடியில் முடிவுற்ற திட்டப்பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளின் கலப்புத் தீவன தேவையைப் பூர்த்திசெய்யும் வண்ணம் கடலூர் மாவட்டம், திட்டக்குடியில் ரூ.33 கோடி மதிப்பில் தினசரி 300 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட கால்நடை தீவன ஆலைக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார். ம.பொடையூர் கிராமத்தில் 6.77 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ள இந்த தீவனத் தொழிற்சாலையால் இப்பகுதியைச் சார்ந்த மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதுடன், கடலூர், விழுப்புரம் மற்றும் அருகில்உள்ள மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்குத் தரமான கலப்புத் தீவனம் கிடைக்கும்.

நிகழ்ச்சியில், அமைச்சர்கள் ஆர்.காந்தி, சி.வி.கணேசன், மனோ தங்கராஜ், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, துறையின் செயலர் கே.கோபால், ஆவின் மேலாண் இயக்குநர் சு.வினீத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



# பா.ஜ.,வுக்கு ஓட்டு போடாத மக்களை மத்திய அரசு பழி வாங்குகிறது

# அதிகாரத்தையும் பறிப்பதாக ஸ்டாலின் ஆவேசம்

**'பா.ஜ.,வுக்கு ஓட்டு போடாத மாநில மக்களை, மத்திய அரசு பழி வாங்குகிறது. மாநிலங்களின் அதிகாரத்தையும் பறிக்கிறது' என, முதல்வர் ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.**

மத்திய பட்ஜெட்டில் தமிழகம் அடியோடு புறக்கணிக்கப்பட்டதாக கூறி, தமிழகம் முழுவதும் நேற்று தி.மு.க., ஆர்ப்பாட்டம் நடத்தியது. இதே காரணத்தால், மாநிலங்களுக்கு நிதி வழங்குவது குறித்து நிடி ஆயோக் அமைப்பு நேற்று டில்லியில் நடத்திய ஆலோசனை கூட்டத்தை முதல்வர் புறக்கணித்தார்.

பிரதமர் தலைமையில் நடந்த அக்கூட்டத்தில், மேலும் ஏழு மாநில முதல்வர்கள் பங்கேற்காமல் ஒதுங்கினர்.

கண்டன ஆர்ப்பாட்டம்

கட்சியின் கண்டன ஆர்ப்பாட்டம் ஏன் என்பதையும், டில்லிக்கு போகாமல் தவிர்த்தது ஏன் என்பதையும் மக்களுக்கு விளக்கும் வகையில் ஸ்டாலின் ஒரு வீடியோ அறிக்கை வெளியிட்டார். அதில் அவர் கூறியதாவது:

லோக்சபா தேர்தலில் பா.ஜ.,வை பல்வேறு மாநில மக்கள் புறக்கணித்தனர். அப்படி புறக்கணித்த மக்களை பழிவாங்கும் விதமாக மத்திய அரசு பட்ஜெட் அமைந்துள்ளது.

ஒட்டுமொத்த இந்தியர்களுக்காக உருவாக்க வேண்டிய பட்ஜெட்டை, 'இண்டியா' கூட்டணிக்கு ஓட்டளித்த மக்களை பழிவாங்க, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பயன்படுத்திக் கொண்டார். இந்திய அரசியல் சாசனத்தின் பெயரால் அவர் ஏற்றுக் கொண்ட பதவிப் பிரமாணத்துக்கே முரணானது.

மத்திய பா.ஜ., அரசு தொடர்ந்து தமிழகத்தை புறக்கணித்து வருகிறது. தமிழகத்துக்கு என அவர்கள் அறிவித்த ஒரே ஒரு சிறப்பு திட்டம் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை. பத்து ஆண்டுகள் ஆகியும் அது எந்த நிலையில் இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும்.

பட்ஜெட்டுக்கு இரண்டு நாட்கள் முன்பு கூட, தமிழகத்தின் தேவைகளை நினைவூட்டினேன். அதில் ஒன்றை கூட நிதி அமைச்சர் ஏற்கவில்லை. 'தமிழ்நாடு' என்ற சொல்லே பட்ஜெட்டில் இல்லை. இத்தனை ஆண்டுகளாக, சும்மா ஒப்புக்காகவாவது ஒரு திருக்குறளை கூறி பட்ஜெட் வாசிப்பார். இந்த முறை திருவள்ளுவரும் கசந்து விட்டார் போல.

தமிழகம் மிகவும் எதிர்பார்த்தது, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கான மத்திய அரசின் நிதி. கொரோனா தொற்று காலத்தில் சென்னைக்கு வந்து அதை துவக்கி வைத்ததே உள்துறை அமைச்சர் அமித் ஷா தான்.

தமிழக அரசுடன் இணைந்து 63,000 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றுவோம் என நிதி அமைச்சரே 2021 பட்ஜெட்டில் அறிவித்தார். ஆனால், இன்று வரை ஒரு ரூபாய் கூட தரவில்லை.

எத்தனையோ முறை கேட்டும் பலன் இல்லை. கோவை, மதுரை மாநகரங்களில், மெட்ரோ ரயில் திட்டங்கள் குறித்து மூச்சே விடவில்லை. வலியுறுத்தி கேட்டதற்கு, மெட்ரோ ரயில் என்பது மாநில அரசின் திட்டம் என பார்லிமெண்டிலேயே பதில் தருகின்றனர்.

அப்படி என்றால், இணைந்து செயல்படுத்துவோம் என்ற வாக்கு என்னாயிற்று? மாநில அரசின் திட்டம் என்றால் இனிமேல் ரயில்வேயை மாநிலங்களிடம் ஒப்படைத்து விடுவீர்களா?

அப்பட்டமான பாரபட்சம்

கடந்த ஆண்டு இரண்டு முறை தமிழகத்தை புயல் தாக்கியது. நிதி அமைச்சரே வந்து சேதங்களை பார்வையிட்டார்; உதவி செய்வதாக உறுதி அளித்தார்.

ஆனால், 37,000 கோடி கேட்டதற்கு, வெறும் 276 கோடி ரூபாய் தந்து ஏமாற்றி விட்டார். அதே சமயம், தங்கள் பதவி நாற்காலிக்கு கால்களாக முட்டுக் கொடுக்கும் இரண்டு மாநிலங்களுக்கு, 30,000 கோடி ரூபாய்க்கு மேல் அள்ளி வழங்கி இருக்கிறார். இதைக்காட்டிலும் அப்பட்டமான பாரபட்சம் இருக்க முடியாது.

தேர்தல் தோல்விக்கு காரணம் என்ன என்பதை உணர்ந்து திருத்திக் கொள்வதற்கு பதிலாக, பா.ஜ., அரசு மேலும் மேலும் தவறு செய்கிறது.

இதனால், மேலும் மேலும் தோல்வியை சந்திப்பீர்கள். பார்லிமெண்டில் இரு சபைகளும் கொந்தளிப்பதுபோல, இந்திய மக்களின் மனங்களும் கொந்தளிப்பில் இருக்கிறது. இதற்கு பா.ஜ., பதில் சொல்லியே தீர வேண்டும்.

இவ்வாறு முதல்வர் கூறியுள்ளார்.

ஏற்கனவே நடந்து வரும் திட்டங்களுக்கான நிதியை குறைக்கும் வஞ்சக முயற்சியிலும் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது. தமிழக பள்ளிக் கல்வித் துறையை முடக்கும் வகையில், 20 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படுத்தப்படும் அனைவருக்கும்

கல்வி இயக்கம் திட்ட நிதியைக் கூட நிறுத்தி வைத்துள்ளனர்.

கேட்டால், தேசிய கல்விக் கொள்கையை செயல்படுத்துவோம் என ஒப்புக்கொண்டால்தான் நிதி தருவார்களாம். மாணவர்களின் கல்வி பாழாகுமே, ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க முடியாமல் போகுமே என்றெல்லாம் அவர்களுக்கு கவலையே இல்லை. தங்களின் கொள்கை திணிப்பையும், ஹிந்தி திணிப்பையும் மட்டுமே பா.ஜ., அரசு முன்னிறுத்துகிறது.

மாநிலங்களை கலந்து ஆலோசிக்காமல், மாநிலங்களால் விதிக்கப்படும் முத்திரைத்தாள் கட்டணத்தை குறைப்போம் என, பட்ஜெட்டில் அறிவித்துள்ளனர். ஜி.எஸ்.டி.,யால் தமிழகத்திற்கு ஏற்பட்ட இழப்பை சரி கட்டுவதற்கான, 20,000 கோடி ரூபாய் இழப்பையே இன்னும் அளிக்காத மத்திய அரசுக்கு, மாநிலங்களின் வரி விதிப்பை மாற்றும் அதிகாரத்தை யார் கொடுத்தது?



# சென்னை விமான நிலையத்தில் தீவிரவாதிகள் விமானத்தை கடத்த முயற்சிப்பதை தடுக்கும் பாதுகாப்பு ஒத்திகை

சென்னை சர்வதேச விமான நிலையத்தில் திடீரென தீவிரவாதிகள் விமானத்தை கடத்த முயற்சி செய்தால், அதனை எவ்வாறு முறியடித்து, தீவிரவாதிகளை மடக்கிப் பிடித்து, விமானத்துக்கும், பயணிகளுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்வது என்பது தொடர்பான பாதுகாப்பு ஒத்திகை இன்று



நடத்தப்பட்டது.

இந்த ஒத்திகையின்போது, தீவிரவாத இயக்கங்களைச் சேர்ந்த 4 தீவிரவாதிகள் திடீரென விமான நிலையத்தின் உள் பகுதியில், பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் புகுந்துவிட்டனர். அவர்கள் சென்னையில் இருந்து புறப்பட இருக்கும் ஒரு விமானத்துக்குள் ஊடுருவி, அந்த விமானத்தை நடுவானில் கடத்த திட்டமிட்டுள்ளனர் என்ற ரகசிய தகவல் வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

உடனடியாக மத்திய தொழில் பாதுகாப்புப் படை அதிரடிப்படையினர், விமான பாதுகாப்புப் படை பிரிவினர், விமானக் கடத்தலை முறியடிக்கும் சிறப்பு அதிரடிப்படையினர் உள்ளிட்டோர் இயந்திரத் துப்பாக்கிகளுடன் சென்னை விமான நிலையத்தின் ஓடுபாதை பகுதிகளைச் சுற்றி வளைத்தனர். அப்போது கருப்பு டீ சர்ட், ஜீன்ஸ் பேன்ட் அணிந்து, அங்கு மறைந்திருந்த 4 இளைஞர்களை, இயந்திர துப்பாக்கிகள் முனையில் மடக்கிப் பிடித்தனர். பின்னர், 4 பேரையும் பலத்த பாதுகாப்புடன், வாகனம் ஒன்றில் ஏற்றி விமான நிலைய ஓடுபாதை பகுதியில் இருந்து வெளியில் கொண்டு சென்றனர்.

இந்தச் சம்பவத்தால் சென்னை விமான நிலைய ஓடுபாதை பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது. பின்னர், நடந்த சம்பவங்கள் அனைத்தும், விமான கடத்தலை தடுக்க எடுப்பதற்கான பாதுகாப்பு ஒத்திகைதான் என்று அறிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து விமான நிலையத்தில் சகஜ நிலை திரும்பியது.

பாதுகாப்பு ஒத்திகை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டதாகவும், இதுபோன்ற ஒத்திகை 6 மாதங்களுக்கு ஒரு முறை சென்னை விமான நிலையத்தில் நடத்தப்படுகிறது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக, சென்னை விமான நிலையத்தில் மத்திய உள்துறை இணைச் செயலாளர் ஆணி மேரி ஸ்வர்ணா தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், விமான பாதுகாப்புத் துறையான பிசிஏஎஸ், மத்திய தொழில் பாதுகாப்புப் படை, விமான நிறுவனங்கள், இந்திய விமான நிலைய ஆணையம், மத்திய உளவுப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# பணி ஓய்வுபெற்ற 26 போலீஸார்: பாராட்டி வழியனுப்பிய சென்னை காவல் ஆணையர்

**செ**ன்னையில் பணி ஓய்வுபெற்ற 26 போலீஸாருக்கு சான்றிதழ் வழங்கி காவல் ஆணையர்அருண் பாராட்டி வழியனுப்பி வைத்தார். சென்னை பெருநகர காவல் துறையில் பணியாற்றிய 14 காவல் உதவி ஆய்வாளர்கள், 10 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்கள், அமைச்சுப் பணியாளர்கள் உட்பட26 பேர் நேற்றுடன் பணி ஓய்வுபெற்றனர். 25 முதல் 39 ஆண்டுகள் வரை பணிபுரிந்த அவர்களுக்கு பிரிவு உபசார விழா சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் நேற்றுநடைபெற்றது.

இந்நிலையில் பணி ஓய்வு பெற்றவர்களை அழைத்து தமிழக காவல்துறைக்கும் சென்னை பெருநகரகாவல் துறைக்கும் சேவையாற்றியதை நினைவு கூர்ந்து அனைவருக்கும் சால்வை, மாலை அணிவித்து பாராட்டியதுடன் சான்றிதழ்களையும் வழங்கினார்.

மேலும், பணி ஓய்வுபெற்ற போலீஸார் தங்களது உடலையும், குடும்பத்தையும் பேணி காக்க வேண்டும்.ஏதேனும் உதவி தேவைப்பட்டாலோகுறைகள் தெரிவிக்க விரும்பினாலோ நேரில் சந்தித்து முறையிடலாம்எனவேண்டுகோள்விடுத்தார். பின்னர் ஓய்வூதிய பலன்களை விரைந்து வழங்க வேண்டும் என தொடர்புடைய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் காவல் ஆணையர் (தலைமையிடம்) கபில்குமார் சி.சரட்கர், இணை ஆணையர் கயல்விழி, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவு துணை ஆணையர் வனிதா மற்றும் ஓய்வுபெற்ற போலீஸாரின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.



பணி ஓய்வுபெற்ற 26 போலீஸாருக்கு காவல் ஆணையர் அருண், சான்றிதழ் வழங்கி பாராட்டினார். நிகழ்ச்சியில் கூடுதல் காவல் ஆணையர் (தலைமையிடம்) கபில்குமார் சி.சரட்கர், இணை ஆணையர் கயல்விழி, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு துணை ஆணையர் வனிதா மற்றும் ஓய்வுபெற்ற போலீஸாரின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.




# மேம்பாட்டுக்கான முக்கிய அம்சங்கள்

மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு: புதிய வரி விகிதத்தை தேர்வு செய்யும் தனிநபர்களுக்கு வருமான வரி நிலைக்கழிவு ரூ.75,000 ஆக அதிகரிக்கப்படுகிறது. ரூ.3 லட்சம் வரை வருமானம் உள்ளவர்களுக்கு வரியில்லை. ரூ.3 லட்சத்திலிருந்து ரூ.7 லட்சம் வரை வருமானம் உள்ளவர்களுக்கு 5 சதவீதமும், ரூ.7 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை 10 சதவீதம், ரூ.10 லட்சம் முதல் ரூ.12 லட்சம் வரை 15 சதவீதம், ரூ.12 லட்சம் முதல் ரூ.15 லட்சம் வரை 20 சதவீதம், ரூ.15 லட்சத்துக்கு மேல் உள்ள வருமானத்துக்கு 30 சதவீதமும் வரி செலுத்த வேண்டும்.

- வேளாண்மை மற்றும் அதுசார்ந்த துறைகளுக்கு ரூ.1.52 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இயற்கை வேளாண்மைக்கு அடுத்த இரண்டாண்டுகளில் நாடுமுழுவதும் 1 கோடி விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கப்படும்
- புற்றுநோய் சிகிச்சைக்கான 3 மருந்துகளுக்கு இறக்குமதி வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
- மொபைல் போன் மற்றும் சார்ஜர்களுக்கான சுங்கவரி 15 சதவீதமாக குறைக்கப்படுகிறது.
- தங்கம் மற்றும் வெள்ளி மீதான அடிப்படை சுங்க வரி 6 சதவீதமாக குறைக்கப்படுகிறது. பிளாட்டினம் மீதான சுங்க வரி 6.4 சதவீதமாக குறைக்கப்படவுள்ளது
- 25 முக்கிய கனிமங்களுக்கு இறக்குமதி வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
- தோல் மற்றும் ஜவுளி மூலப் பொருட்களுக்கான சுங்க வரி குறைக்கப்படுகிறது.
- 5 ஆண்டுகளில் 4.1 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

மற்றும் திறன்மேம்பாட்டு பயிற்சிக்கு பிரதமரின் 5 திட்டங்கள் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

- ஐந்தாண்டுகளில் 20 லட்சம் இளைஞர்களுக்கு திறன்மேம்பாடு பயிற்சி வழங்கப்படும்.
- 1,000 தொழில் துறை பயிற்சி நிறுவனங்கள் அமைக்கப்படும்.
- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (இபிஎப்ஓ) பதிவு செய்து முதல் முறையாக சேரும் தொழிலாளர்களுக்கு ஒரு மாத சம்பளம் (ரூ.15,000 வரை) 3 தவணைகளில் வழங்கப்படும்.
- நாட்டின் பல்வேறு பகுதிகளில் மகளிர் விடுதிகள், குழந்தை காப்பகங்கள் அமைக்கப்படும்.
- பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், அடுத்த 5 ஆண்டுகளில் நகர்ப்புறங்களில் வீடுகள் கட்டுவதற்கு , மத்திய நிதி ரூ2.2 லட்சம் கோடி உட்பட ரூ.10 லட்சம் கோடி முதலீடு செய்யப்படும்.
- பிரதமரின் சூரிய மின்சக்தி திட்டத்தின் கீழ் ஒருகோடி வீடுகளுக்கு மாதம் 300 யூனிட் இலவச மின்சாரம் கிடைக்கும்
- சோலார் செல் மற்றும் பேனர் தயாரிப்புகளுக்கான மூலப் பொருட்களுக்கு சுங்க வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- 12 தொழில்துறை பூங்காக்கள் விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்
- 5 ஆண்டுகளில் ஒருகோடி இளைஞர்களுக்கு, 500 முன்னணி நிறுவனங்களில் தொழில் பழகுநர் வாய்ப்புகள் வழங்கும் வகையிலான விரிவான திட்டத்தை மத்திய அரசு தொடங்கவுள்ளது. அவர்களின் ஓராண்டு பயிற்சியில் மாதம் ரூ.5000 உதவித் தொகை வழங்கப்படும். அதோடு ஒரு முறை நிதியுதவியாக ரூ.6,000 வழங்கப்படும். பயிற்சிக்கான செலவு



மற்றும் 10 சதவீத உதவித் தொகையை தொழில் நிறுவனங்கள் தங்கள் சிஎஸ்ஆர் நிதியில் இருந்து அளிக்க வேண்டும்.

- தொழிற்சாலை ஊழியர்களுக்கு வாடகைக்கு வீடு வழங்கும் திட்டம் அரசு, தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும்

# முத்ரா கடனுதவி திட்டத்தின் உச்சவரம்பு ரூ. 10 லட்சத்திலிருந்து ரூ.20 லட்சமாக அதிகரிக்கப்படும்.

- 100 உணவு தரநிலை மற்றும் பாதுகாப்புபரிசோதனை ஆய்வகங்கள் அமைக்கப்படும்.
- குறு,சிறு நடுத்தர நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், மின்னணு வர்த்தக ஏற்றுமதி மையங்கள் ஏற்படுத்தப்படும்.
- வேலைவாய்ப்புடன் இணைந்த ஊக்குவிப்பு திட்டத்தின் மூலம் 30 லட்சம் இளைஞர்கள் பயன் பெறுவார்கள்.
- திவால் நடைமுறைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண கூடுதல் தீர்ப்பாயங்கள் அமைக்கப்படும்.

- வீட்டுவசதி திட்டத்தில் 1 கோடி நகர்ப்புற ஏழை மக்கள் பயனடைவர்.
- பத்திரப்பதிவு கட்டணத்தை திருத்தியமைக்க மாநிலங்கள் வற்புறுத்தப்படுத்தப்படும்.
- உலக அளவில் இந்தியாவை சுற்றுலா மையமாக உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேம்படுத்தப்படும். கயா மற்றும் புத்தகயாவில் உள்ள கோயில்கள் மேம்படுத்தப்படும்.
- ஒடிசாவில் நினைவுச் சின்னங்கள் மற்றும் கோயில்கள் புனரமைப்பு பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- நாளந்தா பல்கலைக் கழகம் இருந்த இடம் சுற்றுலா மையமாக மேம்படுத்தப்படும்
- விண்வெளி ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளில் தனியார் பங்களிப்பு ஊக்குவிக்கப்படுகிறது. ரூ. 1000 கோடி ரூபாய் மூலதன நிதியில் விண்வெளி பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் விண்வெளி பொருளாதாரம் 5 மடங்காக அதிகரிக்கும்.
- ஆந்திராவில் புதிய தலைநகர் அமராவதியை கட்டமைக்க சிறப்பு நிதியாக ரூ.15,000 கோடி ஒதுக்கப்படும்.
- பிஹாரில் நெடுஞ்சாலைகளை மேம்படுத்த ரூ.26,000 கோடி ஒதுக்கப்படும். வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 11,500 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும்.
- அசாம், இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவை போன்றவற்றை தடுக்கும் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கவுள்ளது.
- கடன்கள் தவிர மொத்த வருவாய் ரூ.32.07 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த செலவினத் தொகை ரூ.48.21 லட்சம் கோடி
- நிகர வரிவருவாய் ரூ.25.83 லட்சம் கோடி. நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.9 சதவீதம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## விலை குறையும் பொருட்கள்

தங்கம் மற்றும் வெள்ளி மீதான அடிப்படை சுங்க வரி 6 சதவிகிதமாக குறைக்கப்படுவதாக நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார்.

2024-25 நிதியாண்டிற்கான முழு பட்ஜெட்டை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று தாக்கல் செய்தார். இந்த பட்ஜெட்டில் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. பல பொருட்களுக்கு வரி குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல சில பொருட்களின் வரி கூட்டப்பட்டுள்ளது. பட்ஜெட்டில் வரி விகித மாற்றங்களால் எந்த பொருட்களின் விலை குறையும்.. எவையெல்லாம் கூடும் என்பது பற்றிய விவரம் வருமாறு:

## விலை குறையும் பொருட்கள்:

*செல்போன்கள், செல்போன் சார்ஜர்கள், மொபைல் உதிரி பாகங்களுக்கான சுங்க வரி 15 சதவீமாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் செல்போன்கள் மற்றும் சார்ஜர்கள் விலை குறைய வாய்ப்புள்ளது.

* தங்கம், வெள்ளி மீதான சுங்க வரி 6 சதவீதம் ஆக குறைக்கப்பட்டது. தங்கத்திற்கான இறக்குமதி இதற்கு முன்பு 15 சதவிகிதமாக இருந்தது. பிளாட்டினத்திற்கான வரி 6.4 சதவிகிதமாகவும் வெள்ளி பொருட்களுக்கான இறக்குமதி வரி 6 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், தங்கம், வெள்ளி விலை குறைய உள்ளது.

* புற்றுநோய் சிகிச்சைக்கான மூன்று மருந்துகளுக்கு முற்றிலுமாக வரி விலக்கு





வழங்கப்பட்டுள்ளதால் அவற்றின் விலை வெகுவாகக் குறைகிறது.

* இறால், மீன் உணவுகள் உள்ளிட்ட சில கடல் உணவுகளின் மீதான அடிப்படை சுங்க வரி 5 சதவீதம் குறைக்கப்படுகிறது. இதன்மூலம் கடல் உணவுகளின் விலை குறையும். இந்த அறிவிப்பால் பங்குச்சந்தையில் கடல் உணவு உற்பத்தி, ஏற்றுமதி நிறுவனங்களின் பங்குகள் விற்பனை பங்குச்சந்தையில் உச்சம் கண்டன.

சூரிய மின்சாரம் தொடர்பான உதிரிபாகங்கள் மீதான சுங்க வரியை கைவிடுவதாக மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. சோலார் செல்கள், சோலார் பேனல்கள் மீதான மூலதனப் பொருட்களுக்கான வரி ரத்தாகிறது.

*தோல் மற்றும் காலணி தயாரிப்புகளுக்கு சுங்க வரி ரத்து செய்யப்படுகிறது. இதனால் காலணிகள் விலை குறையும்.

* விண்வெளி, பாதுகாப்பு துறையில் இன்றியமையாத 25 முக்கியமான கனிமங்களுக்கு சுங்கவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. பெரோநிக்கல், ப்ளிஸ்டர் காப்பர், ஆகிய கனிமங்களுக்கு அடிப்படை சுங்க வரி ரத்து செய்யப்படுகிறது.

## விலை அதிகரிக்கும் பொருட்கள்;

அமோனியம் நைட்ரேட் மீதான சுங்க வரியை 10 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால்,

இதனால் அமோனியம் நைட்ரேட் சார்ந்த பொருட்கள் விலை உயரும். மக்காத பிளாஸ்டிக் மீதான வரியும் 25 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. சில தொலைதொடர்பு உபகரணங்களில் அடிப்படை சுங்க வரி 10 சதவீதத்தில் இருந்து 15 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. ரூ.10 லட்சத்துக்கும் அதிகமான மதிப்புள்ள குறிப்பிட்ட சில பொருட்களுக்கு 1 சதவீதம் டிசிஎஸ் விதிக்க அரசு முன்மொழிந்துள்ளது.



# 2024ல் பிஹார், ஆந்திராவுக்கு 'சிறப்பு' கவனிப்பு

# அறிவிப்புகள் என்னென்ன?

மத்திய பட்ஜெட்டில் பிஹார், ஆந்திர மாநிலங்களுக்கு சிறப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் (ஜூலை 23) 2024–25 நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்தார். மக்களவை தேர்தலுக்கு பிறகு புதிய அரசு அமைந்திருப்பதால் நடப்பு 2024–25 நிதி ஆண்டுக்கான முழு பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

நிர்மலா சீதாராமன் தொடர்ச்சியாக தாக்கல் செய்யும் 7–வது பட்ஜெட் ஆகும். மத்திய அமைச்சரவை ஒப்புதலுடன் பட்ஜெட்டை தாக்கல் செய்த நிர்மலா சீதாராமன் ஆந்திரா மற்றும் பிஹாருக்கு சிறப்பு திட்டங்களை அறிவித்தார். மேலும், தனது பேச்சின்போது சந்திரபாபு நாயுடுவின் கனவுத் திட்டமான பொலாவரம் நீர்ப்பாசன திட்டத்துக்கு நிதி வழங்க மத்திய அரசு உறுதியாக கூறினார்.

பிஹாருக்கான சிறப்பு திட்டங்கள்: பாட்னா – பூர்னியா விரைவுச்சாலை பிஹார் சாலை திட்டங்களுக்காக ரூ.26,000 கோடி வழங்கப்படும்.

பிஹாரின் பாகல்பூர் மாவட்டத்தில் உள்ள பிர்பைண்டியில் ரூ.21,400 கோடி செலவில் 2,400 மெகாவாட் மின்

உற்பத்தி நிலையம் அமைக்கப்படும்.

பிஹாரில் புதிய விமான நிலையங்கள், மருத்துவக் கல்லூரிகள் மற்றும் விளையாட்டு உள்கட்டமைப்பு அமைக்கப்படும்.

பக்சர் மாவட்டத்தில் ஓடும் கங்கை ஆற்றின் மீது இருவழிப் பாலம் அமைக்கப்படும்.

ரூ.11,500 கோடி நிதியுதவியுடன் வெள்ளக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு பிஹாரில் உருவாக்கம்.

மத்திய அரசின் ''பூர்வோதயா'' திட்டத்தில் பிஹார் இணைக்கப்படும்.

பிஹாரின் கயாவில் தொழில்முனையத்தை மேம்படுத்தும் வகையில் கயா முதல் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அம்ரிஸ்தரஸ் வரை பொருளாதார வளர்ச்சி திட்டம் கொண்டுவரப்படும்.

வங்கிகளின் வளர்ச்சிக்கான நிதியை விரைவாக வழங்க வேண்டும் என்ற பிஹார் அரசின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு பிஹாரின் கயாவில் உள்ள விஷ்ணுபாத் கோயில் மற்றும் மஹாபோதி கோயில் மேம்பாட்டுக்கான திட்டங்களை மத்திய அரசு மேற்கொள்ளும்.

ஆந்திராவுக்கான சிறப்பு திட்டங்கள்: ஆந்திர மாநில வளர்ச்சிக்காக ரூ.15,000 கோடி ஒதுக்கப்படுகிறது.

ஆந்திராவில் தலைநகர் நிறுவ நிதி சார்ந்து, ரூ. 5000 கோடி ஒதுக்கப்படும்.

பொலாவரம் நீர்ப்பாசன திட்டத்திற்கு நிதி வழங்க மத்திய அரசு உறுதி.

விசாகப்பட்டினம் – சென்னை தொழில்துறை வழித்தடத்துக்கு கூடுதல் ஒதுக்கீடுகள் அறிவிக்கப்படும்.

ஆந்திரப் பிரதேசத்தை உள்ளடக்கிய ஹைதராபாத் –பெங்களூரு தொழில்துறை வழித்தடம் புதிதாக நிறுவப்படும்.

ஆந்திர மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ், ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டம், 2014ன் கீழ் ஆந்திராவுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்ற மத்திய அரசு உதவும்.

ஆந்திர வளர்ச்சித் திட்டங்களுக்கான மூலதனச் செலவினங்களுக்காக கூடுதல் ஒதுக்கீடு வழங்கப்படும்.

ஆந்திர மாநிலத்தின் மூன்று மாவட்டங்களுக்கு பின்தங்கிய பகுதிகளுக்கான நிதி வழங்கப்படும்.

ஆந்திர அரசு புதிய சாலைகள் மற்றும் நீர் குழாய்கள் அமைக்க நிதி உதவி கேட்டுள்ளது. இதற்கு மத்திய அரசு சம்மதம் தெரிவிக்கிறது. நிதி உதவிகள் ஆந்திர அரசுக்கு வழங்கப்படும்.

ஆந்திராவில் ரயில் இணைப்புகள் மேம்படுத்தப்படும்.

முக்கியத்துவம் ஏன்? – மக்களவை தேர்தலில் பெரும்பான்மை இல்லாத பாஜக மீண்டும் ஆட்சிக்கு வர, ஆந்திராவை சேர்ந்த தெலுங்கு தேசம் மற்றும் பிஹாரை சேர்ந்த ஜனதா தளம் கட்சிகள் கூட்டணியுடன் ஆட்சி அமைத்தது. இந்த இருகட்சிகளின் முக்கிய கோரிக்கையாக மாநிலங்களுக்கு சிறப்பு அந்தஸ்து இருந்த நிலையில், இதுவரை சிறப்பு அந்தஸ்து தரப்படவில்லை. இந்த நிலையில்தான் தற்போது பட்ஜெட்டில் ஆந்திரா மற்றும் பிஹாருக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

# வயநாடு நிலச்சரிவு: விஐடி பல்கலை. ரூ.1 கோடி நிதி உதவி



வயநாடு நிலச்சரிவு பாதிப்புகளில் இருந்து மீண்டு, மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்ப உதவும் வகையில், விஐடி பல்கலைக்கழகம் சார்பில் ரூ.1 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. ரூ.1 கோடிக்கான வரைவோலையை கேரள முதல்வர் பினராயி விஜயனிடம், விஐடி பல்கலைக்கழக வேந்தர் ஜி.விசுவநாதன் வழங்கினார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு: கேரள மாநிலம் வயநாட்டில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த நிலச்சரிவில் சிக்கி மக்கள் தங்கள் வாழ்வாதரங்களை இழந்து பெரும் துயரத்துக்கு உள்ளாகியுள்ளனர். இந்த பெரும் இயற்கை சீற்றத்தால் மக்கள் பலர் தங்கள் குடும்பங்களை இழந்து பெரும் துன்பத்துக்கு உள்ளாகியுள்ளனர். இந்த துயரத்திலுருந்து மக்கள் விரைவில் மீண்டு இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும். இதற்காக விஐடி பல்கலைக்கழகம் சார்பில் கேரள முதல்வர் பினராயி விஜயனை தலைமைச் செயலகத்தில் சந்தித்த விஐடி பல்கலைக்கழக வேந்தர் டாக்டர். கோ. விசுவநாதன் ரூபாய் ஒரு கோடிக்கான வரைவோலையை (DD) வழங்கினார்.

விஐடி பல்கலைக்கழகம் கடந்த காலங்களில் பல்வேறு இயற்கை சீற்றம் மற்றும் கரோனா காலகட்டங்களில் மக்களுக்கு பல்வேறு வகையில் நிதி உதவி மட்டுமல்லாமல் பல்வேறு உதவிகளையும் வழங்கி உள்ளது. கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்துவதோடு மட்டுமல்லாமல் நாட்டில் பல்வேறு மாநிலங்களில் இயற்கை சீற்றத்தால் பாதிப்புக்குள்ளான போது விஐடி பல்கலைக்கழகம் மனிதநேயத்தோடும், தாய் உள்ளத்தோடும் உதவி செய்துள்ளது. அதேபோல் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துயர் துடைக்கும் பணியில் விஐடி பல்கலைக்கழகம் தொடர்ந்து தனது பங்களிப்பை அளிக்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி அளிப்பின்போது, விஐடி துணைத்தலைவர் சங்கர் விசுவநாதன், டாக்டர்.ஜி.வி.செல்வம், உதவி துணைத் தலைவர் காதம்பரி ச.விசுவநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

# “அண்ணாமலை விவரமே இல்லாதவர்!”

# அமைச்சர் துரைமுருகன் சாடல்




அண்ணாமலை விவரம் புரிந்தவர் என்று இவ்வளவு நாள் நினைத்திருந்தேன். ஆனால், அவர் விவரமே இல்லாதவர் என தெரிகிறது” என்று நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

வேலூர் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து 5 நகர பேருந்துகள் மற்றும் 17 புறநகர பேருந்துகள் என மொத்தம் ரூ.8.43 கோடி மதிப்பீட்டில் 22 புதிய பேருந்துகளின் இயக்கம் மற்றும் சேர்க்காடு கலைஞர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 2 வழிதடப் பேருந்துகள் நீட்டிப்பு சேவை இன்று (ஆக.5) தொடங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் வி.ஆர்.சுப்புலட்சுமி தலைமை தாங்கினார். நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று புதிய பேருந்துகளின் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

முன்னதாக அவர் பேசும்போது, “வேலூர் மாவட்டத்தில் 22 புதிய பேருந்துகளின் சேவையை தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சியாக உள்ளது. அரசு பேருந்துகளை இயக்குவதன் மூலம் பொதுமக்கள் தங்களுடைய சொந்த வாகனங்களில் செல்வது போன்ற உணர்வினை

அடைகின்றனர். ஒரு காலத்தில் பேருந்துகள் என்பது தனியார் வசம் இருந்தது. தனியார் பேருந்துகளில் முதலாளிகள் வைப்பதே சட்டமாக இருந்தது. முன்னாள் முதல்வர் கருணாநிதி போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது இந்த துறை செம்மைப்படுத்தப்பட்டது.

போக்குவரத்துத் துறையில் மிகப் பெரும் புரட்சியை உருவாக்கியவர் கருணாநிதி. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் கருணாநிதி போக்குவரத்து துறை அமைச்சராக இருந்தார். அவர் அமைச்சராக இருந்தபோதுதான் ஒவ்வொரு பேருந்திலும் வள்ளுவர் படமும், திருக்குறளும் இருக்க வேண்டும் என உத்தரவிட்டார். பயண நேரத்தில் பொதுமக்கள் அந்த திருக்குறளை படித்து அதன்படி செயல்படுவார்கள் என்ற எண்ணத்தோடு அதை அவர் செயல்படுத்தினார். அரசு போக்குவரத்து தொழிலாளர்கள் தங்களுடைய பணியை வேலையாக கருதாமல் சேவையாக செய்ய வேண்டும்.

ஒரு சில வழித்தடங்களில் பேருந்துகளில் பொதுமக்கள் இல்லை, கூட்டம் இல்லை என்ற காரணத்திற்காக பாதியிலேயே நிறுத்தி இயக்கப்படுகிறது. வேலூரில் இருந்து காட்பாடி டெல் தொழிற்சாலை வரை இயக்கப்பட்ட பேருந்துகள் தற்போது வள்ளிமலை கூட்டுச்சாலை வரை மட்டுமே இயக்கப்படுகிறது.

அவர்களுக்கு உரிய வழித்தடத்தில் இயக்காவிட்டால் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த கிராமத்தில் இருந்து பேருந்து புறப்படுகிறது என்று அறிவிக்கப்படுகிறதோ அந்த இடத்தில் இருந்து பொதுமக்கள் இருந்தாலும், இல்லை என்றாலும் அங்கிருந்துதான் புறப்பட வேண்டும். இதை மாவட்ட ஆட்சியர் மற்றும் போக்குவரத்து அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும்'' என்றார்.

பின்னர், செய்தியாளர்களிடம் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கூறும்போது, ''வேலூர் புதிய பேருந்துநிலையம் தொடங்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும் ஏடிஎம் மையம், மருந்தகம், உணவகம் உள்ளிட்ட வசதிகள் இல்லாதது மற்றும் கடைகள் அப்படியே இருப்பது குறித்த புகார்களை மாவட்ட ஆட்சியர் ஒரு மாதத்தில் தனி கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பார்.

வயநாடு பேரிடர் இதயம் உள்ளவர்களை எல்லாம் உருகவைத்து, அழவைத்த துயர சம்பவம். அதைக்கூட நாங்கள் பேரிடராக அறிவிக்க மாட்டேன் என்று மத்திய அரசு அறிவித்திருப்பது அவர்களிடத்தில் இருப்பது இதயமா? கல்லா என்று தெரியாது. மேகேதாட்டு பிரச்சினையில் அண்ணாமலை கூறிய கருத்துக்குப் பிறகு நான் அவரை விவரம் புரிந்தவர் என்று இவ்வளவு நாள் நினைத்திருந்தேன். அத்தனை பேரை சமாளிக்கிறார் என்று அவரைப் பற்றி பலரிடம் கூறி இருக்கிறேன். ஆனால், அவர் விவரமே இல்லாதவர் என தெரிகிறது'' என்றார்.

இந்த நிகழ்ச்சியில், சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார், ப.கார்த்திகேயன், அமலு விஜயன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் மு.பாபு, துணை மேயர் சுனில்குமார், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர் குணசேகரன், வேலூர் மண்டல பொது மேலாளர் கணபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



சென்னை பாதுகாப்பு கணக்குகள் கட்டுப்பாட்டாளர் டி.ஜெயசீலன்

# பாதுகாப்பு கணக்குகள் துறை சார்பில் செப்.15 வரை ஓய்வூதிய துரித குறை தீர்ப்பு முகாம்

பாதுகாப்பு கணக்குகள் துறை சார்பில், ஓய்வூதியதாரர்களின் பல்வேறு ஓய்வூதியம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண வரும் செப்டம்பர் 15–ம் தேதி வரை ஓய்வூதிய துரித குறை தீர்ப்பு முகாம் நடத்தப்படுகிறது என சென்னை பாதுகாப்பு கணக்குகள் கட்டுப்பாட்டாளர் டி.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

சென்னை பாதுகாப்பு கணக்குகள் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தில் முப்படை ஓய்வூதியதாரர்களின் குறைகளுக்கு தீர்வு காண வாரந்தோறும் திங்கட்கிழமை காலை 11 மணிக்கு 'காஃபி வித் கன்ட்ரோலர்' (Coffee with Controller) எனும் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முகாமில் முப்படை ஓய்வூதியதாரர்கள் தங்கள் ஓய்வூதியம் தொடர்பான குறைகள் மற்றும் சந்தேகங்களை சென்னை பாதுகாப்பு கணக்குகள் கட்டுப்பாட்டாளர் டி. ஜெயசீலனிடம் நேரடியாக முறையிட்டு துரித நடவடிக்கையின் மூலம் தீர்வு கண்டு வருகின்றனர். இதன்படி, இன்று நடைபெற்ற காஃபி வித் கன்ட்ரோலர்' முகாமில் 50–க்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர்கள் கலந்துக் கொண்டனர்.

இம்முகாமில் பங்கு பெற்ற குடும்ப ஓய்வூதியதாரர் சம்பூர்ணத்தின் குறை தீர்ப்பு மனுவின் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்த ஓய்வூதியத் தொகை ரூ. 2.66 லட்சத்துக்கான காசோலை வழங்கப்பட்டது. மேலும், அவர் தனது ஓய்வூதியம் தொடர்பான குறைகள் துரிதமாக தீர்க்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்தார்.

பாதுகாப்பு கணக்குகள் துறை ஓய்வூதியதாரர்களின் பல்வேறு ஓய்வூதியம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண நேற்று (5–ம் தேதி) முதல் வரும் செப். 15–ம் தேதி வரை ஓய்வூதிய துரித குறை தீர்ப்பு முகாம் மத்திய அரசினால் நடத்தப்படுகிறது. இந்த சிறப்பு முகாமில் பாதுகாப்பு கணக்குகள் துறை ஓய்வூதியதாரர்கள் கலந்து கொள்ள 88073 80165 என்ற தொலைபேசி எண்ணுக்கு "ஹிகிஹி" என்ற செய்தியை வாட்ஸ்–அப்பில் அனுப்பி பதிவு செய்து கலந்து கொள்ளலாம் என சென்னை பாதுகாப்பு கணக்குகள் கட்டுப்பாட்டாளர் டி. ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

# தி.மலை தொண்டமானூர் மாரியம்மன் கோயிலை ஒப்படைக்க கிராம மக்கள் கோரிக்கை

தண்டராம்பட்டு அருகே தொண்டமானூர் கிராமத்தில் இந்து சமய அறநிலையத் துறையினர் கையகப்படுத்திய மாரியம்மன் கோயிலை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என ஆட்சியர் தெ.பாஸ்கர பாண்டியனிடம் கிராம மக்கள் இன்று (ஆக.5) கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு அடுத்த தொண்டமானூர் கிராமத்தில் மாரியம்மன் கோயில் உள்ளது. தனிநபர் பெயரில் உள்ள இடத்தில், கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பிரிவினர் இந்த கோயிலைக் கட்டி உள்ளனர். அனைத்து சாதியினரும் வழிபாடு செய்து வந்தனர். ஆடி மாதத்தில் நடைபெறும் திருவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்படும். 3-வது செவ்வாய் கிழமை அம்மன் தேரோட்டம் நடைபெறும். இந்நிலையில் அம்மன் தேரோட்டம் தங்கள் பகுதிக்கும் வர வேண்டும் என வலியுறுத்தி மற்றொரு பிரிவினர் போர்க்கொடி உயர்த்தினர்.

இதனால், கடந்த 2023-ல், ஆடி மாத தேரோட்டம் நடைபெறவில்லை. இப்பிரச்சினை இந்தாண்டும் தொடர்ந்தது. இதனால், கோயிலை கட்டியவர்கள், அம்மன் கோயிலை மூடிவிட்டனர். இதையடுத்து, அம்மன் கோயிலில் ஆடி மாத திருவிழா நடைபெற வேண்டும், 3-வது செவ்வாய்கிழமை (ஆக. 6) கோயில் தேரோட்டத்தை நடத்தி, தங்கள் பகுதிக்கும் கொண்டு வர வேண்டும் என வருவாய் துறையிடம் மனு அளிக்கப்பட்டன. இதுகுறித்து தண்டராம்பட்டு வட்டாட்சியர் நடராஜன் தலைமையில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையின் உடன்பாடு ஏற்படவில்லை.

இதற்கிடையில், தனி நபர்கள் பராமரித்து வந்த மாரியம்மன் கோயிலை, தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இந்துசமய அறநிலையத் துறை முடிவு செய்தது. இதன் எதிரொலியாக, தொண்டமானூர் கிராமத்தில் நேற்று (ஆக.4) காலை காவல்துறையினர் குவிக்கப்பட்டனர். இதையடுத்து மாரியம்மன் கோயில் முன்பக்க இரும்பு கதவின் பூட்டை உடைத்து, தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இந்து சமய அறநிலையத் துறையினர் கொண்டு வந்தனர்.

மேலும் கோயில் உள்ளே இருந்த பொருட்களை வெளியே வீசினர். கோயில் உண்டியலுக்கு சீல் வைத்தனர். கோயில் கதவின் பூட்டை உடைத்த இந்துசமய அறநிலையத் துறை அதிகாரிகளின் செயலால் கிராம மக்கள் அதிர்ச்சி அடைந்து, அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, கண்டனமும் தெரிவித்தனர். காவல் துறையினரின் துணையுடன் கிராம மக்களின் எதிர்ப்பை வருவாய் துறையினர் தடுத்துவிட்டனர். இதைத்தொடர்ந்து மாரியம்மன் கோயிலை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என வலியுறுத்தி திருவண்ணாமலை ஆட்சியர் தெ.பாஸ்கர பாண்டியனை இன்று(ஆக.5) முற்பகலில் சந்தித்து தொண்டமானூர் கிராம மக்கள்





மனு அளித்தனர்.

அப்போது இருகரங்களையும் மேலே உயர்த்தி, கோயிலை ஒப்படைக்குமாறு வலியுறுத்தி பெண்களிடம், கைகளை கீழே இறங்குமாறு ஆட்சியர் கேட்டுக்கொண்டார். பின்னர் அவரிடம் கிராம மக்கள் கூறும்போது, “தொண்டமானூர் கிராமத்தில் தனி நபரின் பெயரில் உள்ள இடத்தில் மாரியம்மன் கோயிலைக் கட்டி உள்ளோம். இக்கோயிலில் மாற்று சாதியினர் வழிபட தடையில்லை. பொங்கலிட்டு வழிபடுகின்றனர். ஆடி மாதம் 3–வது செவ்வாய்கிழமை தேரோட்டம் நடைபெறும்.

அம்மன் தேரோட்டத்தை தங்கள் பகுதிக்கும் கொண்டு வர வேண்டும் என மற்றொரு பிரிவினர் வலியுறுத்துகின்றனர். இவ்வாறு சென்றால், 5 கி.மீ., தொலைவுக்கு அம்மன் தேர் செல்ல வேண்டும். திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் நடைபெறும் தேரோட்டம், மாட வீதியில் நடைபெறுகிறது. இந்த திருத்தேர்களை நகரில் உள்ள சில பகுதிகளுக்கு கொண்டு வர வேண்டும் என்றால் முடியுமா?

காலம் காலமாக நடைபெறுவதை மாற்ற முடியாது. ஒரு சிலரின் ஆதாயத்துக்காக அம்மனை அலைகழிக்க முடியாது. இது குறித்து கோட்டாட்சியர் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தி சுமூக தீர்வு காண வேண்டும். பேச்சுவார்த்தையில் வெளி நபர்கள் பங்கேற்கக் கூடாது. மேலும் தனிநபர் பெயரில் உள்ள இடத்தில், நாங்களே நிதி திரட்டி கோயில் கட்டியுள்ளோம். இதேபோல், ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ.ஆயிரம் முதல் வசூல் செய்து, ஆடித்திருவிழாவை நடத்தி வருகிறோம். பிற நபர்களிடம் நிதி வசூல் செய்யவில்லை. இந்து சமய அறநிலையத் துறையும் நிதி உதவி செய்தது கிடையாது.

இப்படிப்பட்ட நிலையில், தனி நபர் பெயரில் உள்ள இடத்தில் கட்டப்பட்டுள்ள மாரியம்மன் கோயில் பூட்டை வருவாய் துறை மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் உடைத்துள்ளது வேதனை அளிக்கிறது. கோயிலை எங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டோம் எனக்கூறி, பூட்டை உடைத்த பிறகு நோட்டீஸ் வழங்குகின்றனர். கோயில் சாவியை கேட்டிருந்தால், நாங்களே கொடுத்திருப்போம். கோயில் உள்ளே இருந்த பொருட்களை வெளியே வீசி உள்ளனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றனர்.

இதையடுத்து, கோட்டாட்சியர் தலைமையில் இரண்டு தரப்பினரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி சுமூக தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் தெ.பாஸ்கர பாண்டியன் உறுதி அளித்தார். இதையடுத்து கிராம மக்கள் புறப்பட்டு சென்றனர்.

# அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு மாதம் ரூ.1,000 கல்லூரி உதவித்தொகை

# புதுச்சேரி பட்ஜெட்டில் அறிவிப்பு



அரசுப் பள்ளியில் 6 முதல் 12–ம் வகுப்பு வரை படித்த மாணவ – மாணவியருக்கு மூன்று ஆண்டுகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்லூரி உதவித்தொகை வழங்கப்படும் என்று முதல்வர் ரங்கசாமி அறிவித்தார்.

புதுவை சட்டப்பேரவையில் முதல்வர் ரங்கசாமி இன்று (வெள்ளிக்கிழமை) பட்ஜெட் தாக்கல் செய்தார். இலவச அரிசி உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகள் அதில் இடம்பெற்றுள்ளன.

பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள்: ஏழை மக்களின் மருத்துவ செலவு, புதுவை மருத்துவ நிவாரண சங்கத்தின் மூலம் திருப்பி அளிக்கப்படும். காமராஜர் நூற்றாண்டு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஏழை மக்களின் குடிசை வீடுகளை கல்வீடுகளாக மாற்ற நிதியுதவி அளிக்கப்படும். ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதியில் உள்ள கோயில்களை புனரமைக்க ரூ.10 லட்சம் நிதி அளிக்கப்படும். அரசு பள்ளிகளில் 6 முதல் 12–ம் வகுப்பு வரை படித்து, இளநிலை கல்லூரிகளில் படிக்கும் மாணவ – மாணவியருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

புதுவை, காரைக்கால் பிராந்தியத்தில்

நலிவடைந்த கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்த ரூ.15 கோடி நடப்பு நிதியாண்டில் வழங்கப்படும். தடுப்பூசி அட்டவணைப்படி அனைத்து தடுப்பூசிகளையும் செலுத்திக் கொள்ளும் புதுவையை பூர்விகமாக கொண்ட பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு ரூ.10 ஆயிரம் நிதியுதவி அளிக்கப்படும். கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வது தொடர்பாக நிர்வாக விதிமுறைகளில் ஒருமுறை தளர்வு அளித்து, விண்ணப்பங்களை பரிசீலிக்க ஒப்பீட்டு சேவை பயன் கொள்கையை உருவாக்க அரசு ஆராய்ந்து வருகிறது.

செயல்படாத நிறுவனங்களின் மனிதவளம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உகந்த முயற்சி மேற்கொள்ளப்படும். தேசிய ஆயுஷ் திட்டத்தில் நிதி உதவியுடன் ராஜீவ் காந்தி ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பட்டமேற்படிப்பு படிப்புகள் தொடங்கப்பட்டு தரம் உயர்த்தப்படும். தேசிய ஆயுஷ் மிஷன் நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த ஆயுஷ் கல்வி நிறுவனம் புதுச்சேரியில் நிறுவப்படும்.

பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனையில் ஓமியோபதி மருத்துவப்பிரிவு, மருந்தகம் தொடங்கப்படும். புதுச்சேரி அரசு கோயில்களில் கடவுள் திருவுருவச்சிலைகள், தங்கம், வெள்ளி, ஆபரணங்கள், இதர அசையும் சொத்துகள் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் மின்னணு முறையில் ஆவணமாக்கப்பட்டு அவை மக்களின் பார்வைக்கு இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

புதுச்சேரி ஆட்சி பரப்பில் ரூ. 105 கோடி மதிப்பீட்டில் பிரதம மந்திரி ஏக்தா மால் அமைக்க கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் உள்ளூர் பாரம்பரிய கைவினை மற்றும் கைத்தறி பொருட்கள் எளிதாக சந்தைப்படுத்தலாம். சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு உற்பத்தி தொடங்கி முதல் மூன்று ஆண்டுகளுக்கு உரிமங்கள் பெறுவது, ஆய்வுகளில் இருந்து விலக்கு அளிக்கும் சட்டம் 2024 இயற்றி விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் 2017–க்குப் பிறகு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச ஊதியம் ரூ. 5,220–ல் இருந்து ரூ. 13 ஆயிரம் ஆக பல்வேறு வேலைக்கு தகுந்தாற்போல் இருந்தது. அது ரூ. 5220–ல் இருந்து ரூ. 9,940 ஆகவும், அதேபோல் ரூ. 13 ஆயிரத்திலிருந்து ரூ. 23,790 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. புதுச்சேரி நகரப்பகுதியில் 24 மணி நேரமும் குடிநீர் விநியோகம் செய்ய ரூ. 20.38 கோடியில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் நடக்கும்.

புதுச்சேரி – கடலூர் சாலையில் ஏஎஃப்டி அருகே போக்குவரத்து நெரிசலை குறைக்க ரயில்வே துறையுடன் இணைந்து ரூ. 71.4 கோடியில் ரயில்வே மேம்பாலம் கட்டப்படும். இதில் அரசு பங்களிப்பான ரூ. 53.55 கோடி ரயில்வேயிடம் தரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணி விரைவில் தொடங்கப்படும். பாதாளச்சாக்கடை புனரமைப்புப் பணிகள் ரூ.52.5 கோடியில் விரைவில் தொடங்கும்.

ரேஷனில் இலவச அரிசி, மானிய விலையில் பருப்பு, கோதுமை, சர்க்கரை: புதுச்சேரி பட்ஜெட்டில் அறிவிப்பு

புதுச்சேரியில் ரேஷனில் இலவச அரிசி, மானிய விலையில் பருப்பு, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் தரப்படும்

என்று பட்ஜெட் தாக்கல் செய்த முதல்வர் ரங்கசாமி அறிவித்தார்.

பட்ஜெட்டை ராகு காலத்துக்கு முன்பாக நல்ல நேரத்தில் தாக்கல் செய்ய சட்டப்பேரவை இன்று (வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கே கூடியது. நிதித்துறை பொறுப்பு வகிக்கும் முதல்வர் ரங்கசாமி ரூ.12,700 கோடிக்கான பட்ஜெட்டை காலை 9.07 மணிக்கு தாக்கல் செய்யத் தொடங்கினார். மக்களவைத் தேர்தல் காரணமாக கடந்த மார்ச் மாதம் புதுச்சேரியில் முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்யப்பபடவில்லை. அதற்குப் பதிலாக அரசின் 5 மாத செலவினத்துக்கு ரூ.4 ஆயிரத்து 634 கோடிக்கு இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

தேர்தல் முடிந்தவுடன் முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்ய அரசு நடவடிக்கை எடுத்தது. இதற்காக மாநில திட்டக்குழு கூட்டம் ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் தலைமையில் கூடியது. கூட்டத்தில் ரூ.12 ஆயிரத்து 700 கோடிக்கு வரைவு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. புதுவை யூனியன் பிரதேசம் என்பதால் பட்ஜெட்டுக்கு மத்திய அரசு ஒப்புதல் பெற வேண்டும். இதற்காக கோப்பு மத்திய உள்துறை, நிதி அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. புதுவை அரசின் ரூ.12 ஆயிரத்து 700 கோடி பட்ஜெட்டுக்கு மத்திய உள்துறை, நிதித்துறை அமைச்சகம் அனுமதி வழங்கியது.

இதைத்தொடர்ந்து பட்ஜெட் தாக்கல் செய்யும் கோப்புக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்தார். இதன்படி கடந்த 31-ம் தேதி புதுவை சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடரை ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் உரையாற்றி தொடங்கி வைத்தார்.

இந்நிலையில் இன்று நிதித்துறை பொறுப்பு வகிக்கும் முதல்வர் ரங்கசாமி சட்டப்பேரவையில் பட்ஜெட் தாக்கல் செய்தார். வழக்கமாக 9.30 மணிக்கு கூடும் பேரவை இன்று காலை 9 மணிக்கே கூடியது. அத்துடன் ராகுகாலம் 10.30 – 12 மணி என்பதால் நல்ல நேரத்துக்குள் பட்ஜெட்டை தாக்கல் செய்ய முதல்வர் முடிவு எடுத்தார். அதன்படி காலை 9.07க்கு பட்ஜெட்டை தாக்கல் செய்ய தொடங்கினார். பிரதமர் மோடிக்கு வாழ்த்து தெரிவித்து பட்ஜெட் வாசிக்க தொடங்கினார்.

**பட்ஜெட் முக்கிய அம்சங்கள்:**

> மொத்த பட்ஜெட் ரூ.12,700 கோடி.

> மத்திய அரசு ரூ. 3298 கோடி அளித்துள்ளது.

> சொந்த வருவாய் ரூ.6914 கோடி.

> சாலை வசதிக்கு ரூ. 20 கோடியும், மத்திய அரசு மேம்பாட்டு நிதி ரூ. 430 கோடி தந்துள்ளது. கடன்பெற ரூ. 2066.36 கோடிக்கு அனுமதி தரப்பட்டுள்ளது.

> வீட்டு மாடியில் தோட்டம் அமைக்க ரூ. 5 ஆயிரம் இடுபொருள்கள் வழங்கப்படும். ஆடிப்பட்டத்தில் அமல்படுத்தப்படும்.

> கலைமாமணி விருதில் பேச்சுகலை, புகைப்படக்கலை சேர்க்கப்படவுள்ளது.

> காரைக்காலில் தனி அருங்காட்சியகம் அமையும்.

> ஸ்மார்ட் பிடிஎஸ் திட்டம் அறிமுகமாகிறது.

> ரேஷனில் இலவச அரிசி, மானிய விலையில் பருப்பு, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் தரப்படும்.

> ரேஷன் அட்டை சேவைகள் இணையதளம் மூலமும் பொதுசேவை மூலமும் தரப்படும்.

> இனி 11ம் வகுப்பு அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நீட் பயிற்சி தரப்படும்.

# “நகராட்சி, மாநகராட்சிகளுடன் ஊராட்சிகளை இணைத்த பிறகே உள்ளாட்சித் தேர்தல்” அமைச்சர் தகவல்



ஊராட்சிகள், பேரூராட்சிகளை அருகிலுள்ள நகராட்சிகள், மாநகராட்சிகளுடன் இணைக்க வேண்டியதுள்ளது. ஊராட்சிகளை இணைப்பது குறித்து பரிசீலனை செய்த பின்பு உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும் என அமைச்சர் ஐ.பெரியசாமி கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூரில் கலைஞரின் கனவு இல்ல திட்ட பயனாளிகளுக்கு வீடு கட்டும் பணி ஆணைகள் வழங்கும் விழா நடைபெற்றது. ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட 1,256 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்ல திட்டத்தில் வீடு கட்ட பணி ஆணைகளை வழங்கி அமைச்சர் ஐ.பெரியசாமி பேசுகையில், “தமிழகத்தை குடிசை இல்லா மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில் “கலைஞரின் கனவு இல்லம்“ திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக 2024–25ம் ஆண்டில் ஒரு லட்சம் வீடுகள் கட்டி வழங்கப்படும். இத்திட்டத்துக்கக ரூ.3,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தில் 1023 குடிசைகள், புதிய குடிசை வீடுகள் கணக்கெடுப்பில் 1126 குடிசைகள், அனைவருக்கும் வீடு திட்டத்தில் 1946 குடிசைகள் என மொத்தம் 4095 குடிசைகள் கண்டறியப்பட்டு, அந்த குடிசைகள்

“கலைஞரின் கனவு இல்லம்“ திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்டத்தில் வீடு இல்லாதவர்களே இல்லை என்ற நிலையை உருவாக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது” என்று அமைச்சர் ஐ.பெரியசாமி கூறினார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, “ஊராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவை நகராட்சிகள், மாநகராட்சிகளுடன் இணைக்க வேண்டியதுள்ளது. ஊராட்சிகளை சேர்ப்பது குறித்து பரிசீலனை செய்த பின்பு உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும். ஊராட்சிகளில் பதவி காலம் இருக்கும்போது இந்தப் பணிகளை செய்ய முடியாது. தற்போது திண்டுக்கல் மாநகராட்சியில் எந்தெந்த பஞ்சாயத்து சேர உள்ளது என்ற கருத்தினை கேட்க வேண்டும்.

ஏற்கெனவே 7 முதல் 8 ஊராட்சிகள் கருத்துக்களை தெரிவித்துள்ளனர். மேலும், சில ஊராட்சிகள் கொடுக்கவில்லை. அவை அனைத்தையும் சேர்த்து அதற்கான கமிட்டி மூலம் பரிசீலனை செய்து அந்த கமிட்டி முடிவு செய்யும். மாநகராட்சியுடன் அருகிலுள்ள ஊராட்சிகளை இணைப்பது தொடர்பாக கிராம மக்களிடம் கருத்து கேட்பது போன்றவை முடிந்தவுடன் தேர்தல் உடனடியாக நடத்தப்படும்“ என்று அமைச்சர் ஐ.பெரியசாமி கூறினார். இந்நிகழ்வில், திண்டுக்கல் ஆட்சியர் மொ.நா.பூங்கொடி தலைமை வகித்தார். செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.




**தமிழக பாஜக விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு மாநில தலைவர் அமர் பிரசாத் ரெட்டி எழுதிய ‘கனெக்டிங் 1.4 பில்லியன்’ புத்தகம் வெளியீட்டு விழா சென்னை தி.நகர் கமலாலயத்தில் நடந்தது. இதில் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன், ஐஜேகே தலைவர் ரவி பச்சமுத்து, ‘பாலம்’ கல்யாணசுந்தரம், கரு.நாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.**



# கோவை செம்மொழி பூங்கா பணிகளை டிசம்பரில் முடிக்க திட்டம்

## அமைச்சர் நேரு தகவல்

கோவையில் செம்மொழி பூங்கா பணிகள் டிசம்பரில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் கே.என்.நேரு கூறியுள்ளார்.

கோவை காந்திபுரம் மத்திய சிறை அருகே ரூ.133 கோடி மதிப்பீட்டில் செம்மொழி பூங்கா பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகளை இன்று (திங்கள்கிழமை) காலை தமிழக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் முத்துசாமி ஆகியோர் பணிகளை ஆய்வு செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் நேரு, “கோவையில் செம்மொழி பூங்கா அமைக்கும் பணிகளுக்கு தமிழக முதல்வர் அடிக்கல் நாட்டினார். பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. டிசம்பர் மாதத்திற்குள் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள பொறியாளர், உதவி பொறியாளர் உள்ளிட்ட காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக 2,500 பணியிடங்கள் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து நிரப்பப்பட உள்ளது. இதில் 85 சதவீதம் தேர்வு மூலம், 15 சதவீதம் காலியாக உள்ள பணியிடங்கள் நேரடி தேர்வு மூலம் நிரப்பப்படும்.

கோவை மாநகராட்சியில் 333 தீர்மானங்களை 10 நிமிடத்தில் நிறைவேற்றியதில் பிரச்சினை இல்லை. அனைத்து தீர்மானங்களையும் பரிசீலித்து மக்களின் தேவைக்காக நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

கட்டிட வரைப்பட அனுமதிக்கு ஆன்லைன் மூலம் வழங்கும் திட்டத்தால் கட்டண உயர்வு என்பது சரியல்ல. நிலத்தின் மதிப்பு அடிப்படையில் நிர்ணயக்கப்பட்டுள்ளது” என்று அமைச்சர் கே.என்.நேரு கூறியுள்ளார்.

இந்நிகழ்வில், கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், துணை மேயர் வெற்றிச்செல்வன், மாவட்ட செயலாளர்கள் நா.கார்த்திக், ரவி, தளபதி முருகேசன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# கேரள அரசுப் பள்ளிகளில் மாதம்தோறும் ‘புத்தகப்பை இல்லா நாட்கள்’ திட்டம் அறிமுகமாக வாய்ப்பு!



கேரளாவில் மாநில அரசு தனது ‘புத்தகப்பை இல்லா நாட்கள்’ திட்ட முன்முயற்சியை முன்னெடுத்து செல்ல ஆலோசித்து வருவதால், மாநிலத்தில் பள்ளிக் குழந்தைகள் இனி மாதத்தில் நான்கு நாட்கள் அதிக எடையுள்ள பைகளை எடுத்துச் செல்லவேண்டிய தேவை இருக்காது.

இது குறித்து கேரள மாநில பொதுக் கல்வித் துறை அமைச்சர் சிவன்குட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், “பள்ளிக்கூட பைகளின் அதிக எடைகள் குறித்த புகார்கள் அதிகரித்து வரும் நிலையில், பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளின் கவலைகளை நிவர்த்தி செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மாநில அரசு பரிசீலித்து வருகிறது. மாநிலத்தில் 1 முதல் 12 வரை படிக்கும் மாணவர்களின் பள்ளிப் பைகள் அதிக எடையுடன் இருப்பது குறித்து விரைவில் ஓர் அறிவிப்பு வெளியிடும்.

மாணவர்களின் பள்ளிக்கூட பைகள் அதிக எடையுடன் இருப்பது குறித்து பெற்றோர்கள் மற்றும் பொதுக் கல்வி மீது அக்கறை உள்ளவர்களிடமிருந்து பல்வேறு புகார்கள் மற்றும் பரிந்துரைதள் வந்து கொண்டிருக்கிறது. மாணவர்களின் சுமையை குறைக்கும் வகையில் மாநிலத்தில் பாடப் புத்தகங்கள் இரண்டு பிரிவுகளாக அச்சிடப்பட்டு, விநியோகிக்கப்பட்டு வருகின்றன. என்றாலும் இன்னும் மாணவர்களின் பள்ளிப் பைகளின் எடை அதிகமாக இருப்பதாக புகார்கள் வருகின்றன.

1–ம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளிப் பையின் எடை 1.6 கிலோ முதல் 2.2 கிலோ வரையிலும், 10–ம் வகுப்பு மாணவர்களின் பள்ளிப் பையின் எடை 2.5 கிலோ முதல் 4.5 கிலோ வரை இருக்கும் படி வழிகாட்டுதல்கள் வழங்கப்படும். இவை தவிர, மாதத்தில் நான்கு நாட்கள் அரசுப் பள்ளிகளில் ‘புத்தகப்பை இல்லா நாட்கள்’ திட்டத்தை அறிமுகப்படுத்துவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Kootil Muyarchee Tamil Monthly owned Published and Printed by L. Suriyakumar, Printed at Sri Mahendra Graphics, No. 19/1, Poobegam 2nd Lane, Border Thottam, Anna Salai, Chennai - 600 002.**
**and Published from 2/923, 2nd Street, Veerapandi, J.J. Nagar, Tirupur-641605.**
**Editor : L.SURIYAKUMAR Cell : 99941 90815 Email: muyarchimagazine@gmail.com**

# “வெளிநாடுகளுக்கு பயிலச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களின் முழு கல்விச் செலவை அரசே ஏற்கும்”

## - முதல்வர் ஸ்டாலின்



“அரசுப் பள்ளிகளில் பயின்று வெளிநாடுகளில் கல்வி பயிலும் வாய்ப்பு பெற்ற மாணவர்களுக்கான முழு கல்விச் செலவு மற்றும் முதல் பயணச் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும். அதேபோல், இந்தியாவில் முதன்மை கல்வி நிறுவனங்களில் சேர்க்கையைப் பெற்ற மாணவர்களுக்கான கல்விச் செலவையும் அரசு ஏற்கும்.” என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக அரசுப் பள்ளிகளில் படித்து சர்வதேச, தேசிய மற்றும் தமிழக அளவில் சிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் இன்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் மாணவர்களுக்கு சான்றிதழ்கள், மடிக்கணினிகள் வழங்கி பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

தொடர்ந்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: “பள்ளிக்கல்வித் துறையின் சிறந்த பல்வேறு முன்னெடுப்புகளால்தான் இத்தகையை சாதனைகளை நாம் அடைய முடிகிறது. மேலும், மாணவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர்கள், ஆசிரியர்களுக்கு எனது வாழ்த்துகள். திமுக ஆட்சியில் கல்வித்துறை மறுமலர்ச்சி அடைந்துள்ளது. தேசியளவில் உயர்கல்வி மாணவர் சேர்க்கையில்




தமிழகம்தான் முன்னிலையில் உள்ளது. புதுமைப் பெண் திட்டத்தின் பலனால் கல்லூரிகளில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை 34 சதவீதம் உயர்ந்துள்ளது.

அரசுப் பள்ளிகளில் காலத்துக்கு ஏற்ப உயர்தர கணினி ஆய்வகம் உட்பட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் விளைவாகவே நமது மாணவர்கள் தற்போது நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கையை பெற்றுள்ளனர். அதன்படி அரசுப் பள்ளியில் பயின்ற மாணவர்கள் சிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறுவது பெரும் சமூக பொருளாதார மாற்றத்துக்கு அடித்தளமாக இருக்கும்.

வெளிநாடுகளில் கல்வி பயிலும் வாய்ப்பு பெற்ற மாணவர்களுக்கான முழு கல்விச் செலவு மற்றும் முதல் பயணச் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும். அதேபோல், இந்தியாவில் முதன்மை கல்வி நிறுவனங்களில் சேர்க்கையைப் பெற்ற மாணவர்களுக்கான கல்விச் செலவையும் அரசு ஏற்கும். விரைவில் விண்வெளித் துறையில் கூட நமது அரசுப் பள்ளி மாணவர்கள் தடம் பதிப்பார்கள். மேலும், மாணவர்களுக்கு எப்போதும் அரசு உறுதுணையாக இருக்கும்." என்று அவர் பேசினார்.

விழாவில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வரவேற்புரை ஆற்றினார். மேலும், இந்நிகழ்வில் உயர்கல்வித் துறை க.பொன்முடி, சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.